சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 27.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **32/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | சுந்தர் ராஜ் |
| தந்தை பெயர் | : | அழகேசன் |
| கிராமம் | : | செம்மங்குடி |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | துப்புறவு பணியாளர் |
| வயது | : | 48 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.R.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

செம்மங்குடி புது தெருவிற்கு நான் குடிவந்து 20 வருடங்களுக்கு மேலாக இருக்கும். என்னுடைய வீட்டில் என்னுடைய தாயார் மற்றும் எனது சகோதரர் செல்வராஜ் ஒன்றாகதான குடியிருந்து வந்தோம் என்றால் ஆமாம். எதிரியின் வீடு எனது வீட்டிற்கு நேர் எதிர் திசையில் உள்ள வீடு என்று சொன்னால் சரிதான். எதிரியின் வீடு எதிர் திசையில் செல்வராணி வீட்டுடன் அந்த ரோடு

முடிந்து விடுகிறது என்று சொன்னால் சரிதான். அந்த ரோட்டின் முடிவில் உள்ள குழந்தை என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தினை ராதா என்பவர் குத்தகைக்கு எடுத்து நெல் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி ராதா என்பவர் அந்த வயலில் சுமார் 5 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்து வருகிறார் என்றால் அவர் குத்தகைக்கு விவசாயம் செய்து வருகிறார். எத்தனை வருடங்களாக என்று தெரியவில்லை. சுமாராக 3 முதல் 4 வருடங்களாக செய்து வருகிறார். ராதா தனது வயலில் ஆடு, மாடுகள் மற்றும் மனிதர்கள் நுழைந்து பயிரை சேதம் செய்ய கூடாது என்பவர்தாக அந்த பகுதியில் முழுமையாக இரும்பு வலை வேலி தான் அமைத்துள்ளார் என்றால் வலை வேலி தான் அமைத்துள்ளார். அதனால் அந்த சாலை முடிவிற்கு பிறகு அந்த வயலுக்கு செல்ல முடியாது என்றால் சரிதான். அந்த வயலுக்கு பின்னார் உள்ள வயலுக்கு செல்ல வேண்டும் என்றால் செம்மங்குடி குடியான தெரு அல்லது மெயின் ரோட்டில் சிறிது தூரம் சென்றால் வாய்கால் பாதை வழியாக செல்லவேண்டும். புது தெருவிற்கு அரசாங்கம் சிமெண்ட் ரோடு அமைத்து கொடுத்துள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ரோடு என்பது எதிரியின் வீட்டுடன் முடிவடைந்து விட்டதால் எதிரியின் வீட்டிற்கு எதிரே சிமெண்ட் ரோட்டின் நடுவே EB போஸ்ட் அமைக்கபட்டுள்ளது என்றால் இடையே ஒரு இரு சக்கர வாகனம் செல்லலாம். அந்த தெருவில் மொத்தம் 13 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரி எங்கள் ஊர் பஞ்சாயத்து போட்டில் வைஸ் பிரெசிடென்டாகவும், அவரது தாயால் தர்மாபாள் உறுப்பினராகவும், இருந்தார் என்றால் தர்மாபாள் வைஸ் பிரெசிடென், எதிரி உறுப்பினர். எதிரி உறுப்பினராக இருக்கும் போது தான் எனக்கு அவர் சிவாரிசு செய்து துப்புறவு பணி எனக்கு கிடைத்தது என்று சொன்னால் சரிதான். கடந்த பஞ்சாயத்து போர்டு தேர்தலில் செந்தமிழ்செல்வி முனுசாமி தான் ஊராட்சி மன்ற தலைவர் என்றால் சரிதான். அவரை எதிர்த்து ஆஜர் எதிரி போட்டி போட்டு தோற்றுவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய காலத்திற்கு முன்புவரை எங்கள் குடும்பமும் எதிரியின் குடும்பமும் நல்ல முறையில் பழகி வந்தோம் என்றால் சரிதான். ஆஜர் எதிரி வேறு இனத்தை சேர்ந்த பெண்ணை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய காலத்திற்கு முன்பாக

என்னிடம் சாதி பாகுபாடு எதுவும் காட்டியது இல்லை என்றால் சரியல்ல. நான் சராசரியாக நடக்க முடியாத உயரமான இடத்தில் ஏறி வேலை செய்ய முடியாத நபர் என்பவது எதிரிக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். இன்று வரை எதிரி அதே தெருவில் அவரது கூரை வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எதிரியின் கூரை வீட்டில் எந்தவிதமான கட்டிட வேலைகளோ அல்லது மராமத்து வேலைகளோ நாளது தேதி வரை நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான். ஆஜர் எதிரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி தகவல்கள் பெற்று அது குறித்த உயர் அதிகாரிகளுக்கு புகார் மனு அனுப்புவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். எங்கள் ஊர் ஊராட்சி மன்ற தலைவர் செந்தமிழ்செல்வி மீதும் ஆஜர் எதிரி புகார் கொடுத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் நான் கேள்வி பட்டேன் என்னிடம் ஊராட்சி மன்ற தலைவர் சொன்னார். ஊராட்சி மன்ற தலைவரின் கணவர் முனுசாமி என்னுடன் நல்ல நட்புறவில் உள்ளார் என்றால் சரிதான். புது தெருவில் உள்ள எனது வீட்டின் கதவு தகர கதவு என்று சொன்னால் சரிதான். எனது வீட்டின் தளங்கள் பெயர்ந்து வீட்டின் கதவும் சேதம் அடைந்து விட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வீடு பழுதடைந்து விட்ட காரணத்தினால் அவர் வேறு ஊர் சென்று தங்கியுள்ளார் என்றால் அவருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் அவரை நான் அங்கு விட்டுவிட்டு வந்துவிட்டேன். நானும் செம்மங்குடி குடியான தெருவில் உள்ள செல்வராஜ் வீட்டின் திண்ணையில் தான் தங்கியுள்ளேன் என்றால் அவர் வீட்டின் உள்ளே தான் நான் தங்கியுள்ளேன். அவர்கள் உணவு மற்றும் நல்லது, கெட்டது செய்து வருகிறார்கள். நான் கடந்த 15 வருடங்களாக செல்வராஜ் வீட்டில் தங்கி வருகிறேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள வழக்கு சம்பவம் என்பது செம்மங்குடி புது தெருவில் உள்ளவர்களுக்கு தெரியுமா என்றால் 2,3 நபர்களுக்கு தெரியும். எனது புகாரில் அது குறித்த விபரம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி என்னை தாக்கியதாக நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். அதில் எனக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டதா என்றால் பல்லில் இரத்தம் வந்தது. நான் கொடுத்த புகாரில் இரத்தம் வந்தது தொடர்பாக விபரம் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. நான்

மருத்துவமனை எதுவும் செல்லவில்லை. இந்த வழக்கின் சாட்சிகள் அ.சா-2 பாஸ்கரன், அ.சா-3 ரமணன், அ.சா-4 சக்கரவர்த்தி ஆகியோர்கள் எனக்கு சிறு வயது முதலே தெரியும். இவர்கள் எவரும் சம்பவத்தின் போது உடன் இருந்ததாக எனது புகாரிலோ அல்லது நீதிமன்ற முதல் விசாரணையிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த அன்று போலீசார் புகார் கொடுத்ததற்கு மனு ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை. காவல் துணை கண்காணிப்பாளர் என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார் என்றால் வலங்கைமான் காவல் நிலையத்தில் காலை 10.00 மணிக்கு விசாரணை செய்தார். நான் கொடுத்த அ.சா.ஆ-1 ஆன புகாரை எங்கள் ஊர் பஞ்சாயத்து போர்டு கிளர்க் எழுதினார் என்றால் இல்லை. பஞ்சாயத்து போர்டு அலுவலகத்தில் உள்ளவர் எழுதிக்கொடுத்தார். அந்த புகாரை முனுசாமி எழுத சொன்னதன் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அவரது தூண்டுதலின் அடிப்படையில் தான் இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கையெழுத்து செய்து போல் தான் எப்போதும் போடுவேன் மாற்றி போடும் வழக்கம் இல்லை. வழக்கில் உள்ள முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னுடையது தான். அந்த கையொப்பம் புகார் கொடுத்த அன்றே போட்டேன். என்னிடம் காட்டப்படும் மனு ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் அல்ல. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-1 ஆன புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள கையொப்பமும் வேறு வேறு என்று சொன்னால் தவறு என்னுடையது தான். இரு கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் எனக்கு கை நடுங்கும் போது வித்தியாசம் வரும். எனது பணி நேரம் என்ன என்றால் காலை 9.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரை வேலை செய்ய வேண்டும். அதன் பின்னர் அலுவலகம் சென்று கையொப்பம் செய்து வரவேண்டும். அது எப்படியும் மாலை 4.00 மணியாகிவிடும். சம்பவம் நடந்த அன்று நான் வேலைக்கு சென்றிருந்தேன்எ ன்று சொன்னால் ஆமாம். நான் 3.00 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரி மின் ஓயரினை மாற்றி தர

கோரவில்லை என்றும், சரியல்ல. எனது சாதியை சொல்லி திட்டவில்லை என்றும், அல்லது வேறு தகாத வார்த்தைகளை சொல்லி திட்டவில்லை என்றும் என்னை எதிரி தாக்கவோ, மிரட்டவோ இல்லை என்றும், சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் நான் புது தெருவிற்கே செல்லவில்லை என்றும், எனது ஊர் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் அவரது கணவர் ஆகியோருக்கும் எதிரிக்கும் இடையே இருந்த முன்விரோதம் காரணமாக எதிரியை பழிவாங்க வேண்டி என் மூலமாக நடவாத சங்கதியை நடந்தது போல் கற்பணையாக புனைவு செய்து ஒரு பொய் புகாரினை தயார் செய்து முனுசாமி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு உதவி செய்யும் நோக்கில் அதற்கு நான் உடன் பட்டு ஒரு பொய் புகாரினை அளித்து அதனை நான் அனுசரித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.27 17:35:54 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.